Q.C. 078

## DEPARTMENTAL EXAMINATIONS (COMPUTER BASED TEST)

| Name of the Test: | The Account Test for Public Works Department Officers and Subordinates – Part - I (With Books) | 110 |
|---|---|---|

Maximum Time: 2.30 Hour

Maximum Marks: 100

## *IMPORTANT INSTRUCTIONS*

## OBJECTIVE TYPE

கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்கத் தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளைக் கவனமாகப் படிக்கவும்.

1. This computer based Test contains 100 number of questions in objective Type.
   இந்தக் கணினி வழித் தேர்வானது, 100 கொள்குறி வகையிலான வினாக்களைக் கொண்டது.

2. Answer all questions. Each question carries one mark
   அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் ஒவ்வொரு வினாவும் ஒரு மதிப்பெண் உடையது.

3 In case of doubt, English version is the Final.
   வினாக்களில் சந்தேகம் இருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

4. Words of masculine gender in these questions shall, where the context so require, be taken to include feminine gender.
   இந்த வினாக்களில் இடம் பெற்றுள்ள ஆண் பாலினத்தவரின் வார்த்தைகளில் தேவைப்படின், சூழலுக்கேற்ப பெண் பாலினத்தவரின் வார்த்தைகளும் அடங்கும்.

5. Before answering the questions in CBT, candidates should read the following instructions displayed in the monitor:
   விண்ணப்பதாரர்கள் கணினி வழித் தேர்விற்கு விடையளிக்கத் தொடங்கும் முன் கணினியின் திரையில் தோன்றும் அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்.

**a)** One question will be displayed on the screen at a time.
ஒரே நேரத்தில் ஒரு வினா மட்டுமே கணினித் திரையில் தோன்றும்.

**b)** Time available for you to complete the examination will be displayed through a countdown timer in the top right-hand corner of the screen. It will display

1. A Government servant (while on leave) shall be permitted to draw house rent allowance for _________ of leave including maternity leave but not extraordinary leave.

ஒரு அரசு ஊழியர் (விடுப்பில் இருக்கும் பொழுது) ஊதியமில்லா விடுப்பு தவிர்த்து, மகப்பேறு விடுப்பையும் சேர்த்து _________ காலங்களுக்கு வீட்டு வாடகைப்படி பெற அனுமதிக்கப்படுகிறார்.

(A) 2 months
2 மாதங்கள்

(B) 3 months
3 மாதங்கள்

(C) 1 year
1 வருடம்

(D) 6 months
6 மாதங்கள்

2. _________ alone is competent to sanction study leave.

கல்வி விடுப்பு _________ மட்டுமே ஒப்பளிக்கப்பட வேண்டும்.

(A) Government
அரசினால்

(B) Head of the Department
துறைத் தலைவரால்

(C) Chief Engineer
தலைமைப் பொறியாளரால்

(D) Superintending Engineer
கண்காணிப்பு பொறியாளர்

3. When rent has been recovered short through an error in calculation of standard rent or through mistake or inadvertence, the Governance servant shall pay the deficiency on demand made within _________ from the date on which the short recovery was made, in such number of installments as the Government may direct.

அரசு ஊழியருக்கு பிடித்தம் செய்யப்பட்ட வீட்டு வாடகை தவறான கணக்கீட்டினாலோ, தவறுதலாகவோ, கவனக்குறைவாகவோ குறைவாக பிடித்தம் செய்யப்பட்டால், அரசு ஊழியருக்கு குறைவாக பிடித்தம் செய்யப்பட்ட வாடகை பிடித்த வித்தியாசத் தொகையினை _________ க்குள் அரசு நிர்ணயிற்கும் தவணைகளில் திருப்பி செலுத்த வேண்டும்.

(A) 12 months
12 மாதத்திற்குள்

(B) 24 months
24 மாதத்திற்குள்

(C) 6 months
6 மாதத்திற்குள்

(D) 15 months
15 மாதத்திற்குள்

4. The ______ has full powers to sanction estimates for the purchase of "tools and plants" and live stock within the limit of budget allotment.
கருவி மற்றும் தளவாடங்கள் மற்றும் நிலுவையிலுள்ள இருப்புக்கான ஒப்பந்தப்புள்ளியினை, வரவு செலவுக்குள் ஒப்பளிப்பு செய்ய யாருக்கு முழு அதிகாரம் உள்ளது?

(A) Assistant Executive engineer
உதவி செயற் பொறியாளர்

(B) Chief Engineer
தலைமைப் பொறியாளர்

(C) Superintending Engineer
கண்காணிப்பு பொறியாளர்

(D) Executive Engineer
செயற் பொறியாளர்

5. Pay and allowances due to a Government servant, who is certified by a magistrate to be a lunatic, should be paid in accordance with the procedure given under the provisions of
ஒரு மாஜிஸ்திரேட்டரால் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்று சான்றளிக்கப்பட்ட ஒரு அரசாங்க ஊழியருக்கு வழங்கபட வேண்டிய ஊதியம் மற்றும் படிகள் எந்த விதிகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்?

(A) Section 95(1) of Indian Lunacy Act, 1912
இந்திய மனநல சட்டம் பிரிவு 95(1), 1912

(B) Section 85(1) of Indian Lunacy Act, 1912
இந்திய மனநல சட்டம் பிரிவு 85(1), 1912

(C) Section 45(1) of Indian Lunacy Act, 1912
இந்திய மனநல சட்டம் பிரிவு 45(1), 1912

(D) Section 55(1) of Indian Lunacy Act, 1912
இந்திய மனநல சட்டம் பிரிவு 55(1), 1912

6. The limited tender system for stores should ordinarily be adopted whenever the estimated value of the order to be given is
பண்டகச்சாலைக்கான வரையறுக்கப்பட்ட ஒப்பந்த புள்ளிமுறை சாதாரணமாக எப்பொழுது எந்த உத்திரவிடப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு ஏற்றுக் கொள்ளப்படும்?

(A) less than Rs. 10,000
ரூ. 10,000 க்கும் குறைவாக

(B) more than Rs. 5,000 and below Rs. 10 lakh
ரூ. 5,000 க்கும் அதிகமாக மற்றும் ரூ. 10 இலட்சத்திற்கு கீழ்

(C) more than Rs. 10,000 and upto Rs. 25,000
ரூ. 10,000 க்கு மேலும் ரூ. 25,000 க்கு வரையிலும்

(D) less than Rs. 50,000
ரூ. 50,000 க்கும் குறைவாக

7. Approval for sanction to an estimate for a work other than ordinary annual repairs, will, unless the work has been started cease to be in force after _________ years from the date on which it was accorded.
சாதாரண வருடாந்திர பழுதுபார்ப்புகளை தவிர வேறு ஒரு பணிக்கான மதிப்பீட்டு ஒப்புதல், பணி தொடங்கப்படாவிட்டால், அது ஒப்புதல் வழங்கப்பட்ட தேதியிலிருந்து _________ ஆண்டுகளுக்கு பிறகு நடைமுறையில் இருக்காது.

(A) 5
(B) 1
(C) 2
(D) 3

8. The leave salary for the period of maternity leave availed by a female Government servant while on foreign service should be borne
அயற்பணியில் இருக்கும் ஒரு பெண் அரசு ஊழியருக்கான மகப்பேறு விடுப்பு சம்பளத்தை யார் ஏற்க வேண்டும்?

(A) by the Government
அரசாங்கம்

(B) by the foreign employer
அயற்பணி துறை

(C) equally by the Government and foreign employer
அரசாங்கம் மற்றும் அயற்பணித்துறை சமமாக

(D) as beneficial to the Government servant
அரசு ஊழியருக்கு ஏதுவாக

9. In such cases additional pay is not permitted
இந்த சந்தர்ப்பங்களில் கூடுதல் பொறுப்பு ஊதியம் அனுமதிக்கப்படமாட்டாது

(A) additional post subordinate to the regular post
வழக்கமான பதவியில் உள்ள அலுவலர் சார் நிலை பதவியை கூடுதல் பொறுப்பு வகிக்கும் பொழுது

(B) additional post equivalent to the regular post if the duties of the additional post are of exactly identical nature
வழக்கமான பதவியில் உள்ள அலுவலர் அதற்கு இணையான ஒரே பொறுப்புடைய கூடுதல் பணியில் இருத்தல்

(C) additional post equivalent to the regular post are in respect of different territorial jurisdictions
கூடுதல் பணி வழக்கமான பதவிக்கு இணையான வெவ்வேறு பிராந்திய அதிகார வரம்புக்கு உட்பட்டவையாக இருத்தல்

(D) additional post those not in the same office establishment or line of promotion and cadre
கூடுதல் பணி ஒரே அலுவலகத்தின் கட்டுப்பாட்டில் இல்லாமலும், பதவி தரவரிசையில் இல்லாமலும் மற்றும் ஒரே பதவியாக இல்லாமலும்

10. __________ is having full power of Re appropriation in the grant.
மறு ஒதுக்கீடு செய்ய, முழு அதிகாரம் யாருக்கு உள்ளது ?

(A) Finance Department
நிதித்துறை

(B) Administrative Department of Secretariat
தலைமை செயலகத்தின் நிர்வாகத்துறை

(C) Chief Engineer
தலைமைப் பொறியாளர்

(D) Public Works Department
பொதுப்பணித்துறை

11. Tools and plants can only be purchased or manufactured on estimates sanctioned by competent authority with the exception of purchased or manufacture not exceeding for __________ which estimates are not required.

தகுதிவாய்ந்த அதிகாரியால் அனுமதிக்கப்பட்ட மதிப்பீடுகளின் அடிப்படையில் ரூ. __________ க்கு மிகாமல் கருவிகள் மற்றும் தளவாடங்கள் வாங்கலாம் அல்லது தயாரிக்கலாம்.

(A) Rs. 1000
ரூ. 1,000

(B) Rs. 500
ரூ. 500

(C) Rs. 5,000
ரூ. 5,000

(D) Rs. 10,000
ரூ. 10,000

12. A minor irrigation work which irrigates __________ in charge of the Revenue department, unless it has been specially placed in the charge of PWD for maintenance.

__________ நீர்ப்பாசனம் செய்யும் சிறிய நீர்பாசனப் பணியானது, பராமரிப்புக்காக பொதுப்பணித்துறையின் பொறுப்பில் பிரத்தியேகமாக வைக்கப்படாவிட்டால், அது வருவாய் துறையின் பொறுப்பின் கீழ் வந்துவிடும்.

(A) less than 40 hectares
40 ஹெக்டேர் குறைவாக

(B) less than 40 acres
40 ஏக்கருக்கும் குறைவாக

(C) less than 80 hectares
80 ஹெக்டேர் குறைவாக

(D) less than 80 acres
80 ஏக்கருக்கும் குறைவாக

13. All work done otherwise than by daily labour and all supplies relating to a work should be paid for on the basis of measurements recorded in measurement book __________.

கூலி பணியாளர் தவிர மற்றபடி செய்யப்படும் அனைத்து வேலைகளும் மற்றும் ஒரு வேலை தொடர்பான அனைத்து பொருட்களும் அளவீட்டுப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்ட அளவீடுகளின் அடிப்படையில் செலுத்தப்பட வேண்டும்

(A) Common form 298
பொது படிவம் 298

(B) Common form 288
பொது படிவம் 288

(C) Common form 398
பொது படிவம் 398

(D) Common form 278
பொது படிவம் 278

14. The grant of subsistence allowance to the government servants placed under suspension is governed by
தற்காலிக பணிநீக்கத்தின் கீழ் உள்ள அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் பிழைப்பூதியம் __________ ன் கீழ் வழங்கப்படுகிறது.

(A) Fundamental rules
அடிப்படை விதிகள்

(B) TN pension rules, 1978
தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978

(C) TN Government servants conduct rules, 1973
தமிழ்நாடு அரசு பணியாளர் நடத்தை விதிகள், 1973

(D) TN civil services (discipline and appeal) rules, 1955
தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்கு நடவடிக்கை மற்றும் மேல்முறையீடு) விதிகள் 1955

15. Any objection is raised by the Audit officer against the competence of sanction of expenditure by Government should be referred by the Audit officer to
அரசாங்கம் அனுமதிக்கும் செலவினங்களுக்கு எதிராக தணிக்கை அதிகாரியால் ஆட்சேபணை ஏதேனும் எழுப்பப்பட்டால், அது தணிக்கை அதிகாரியால் __________ க்கு பரிந்துரை செய்யப்பட வேண்டும்.

(A) Secretary, Finance Department
செயலாளர், நிதித்துறை

(B) Chief Secretary to Govt.
அரசு தலைமைச் செயலாளர்

(C) Governor
ஆளுநர்

(D) Government of India
இந்திய அரசாங்கம்

16. Pay bill register and acquaintance registers of employees other than travelling allowances for whom SR maintained should be preserved at record upto which period?
பணிப்பதிவேடு பராமரிக்கப்படும் ஊழியர்களின் சம்பளப்பட்டியல் பதிவேடு மற்றும் சம்பளம் வழங்கும் பதிவேடு ஆகியவை எத்தனை ஆண்டுகள் பாதுகாக்கப்பட வேண்டும்?

(A) 30 years
30 ஆண்டுகள்

(B) 6 years
6 ஆண்டுகள்

(C) 40 years
40 ஆண்டுகள்

(D) 25 years
25 ஆண்டுகள்

17. The maximum period upto which continuance of deputation of Gazette officers can be sanctioned by the Heads of Department should not exceed
மாற்றுப்பணியிலிருக்கும், அரசிதழ் பதிவு அலுவலரின் பணிக்காலத்தினை தொடர்வதற்கு துறைத் தலைவரால் அனுமதிக்க கூடிய காலம் __________ க்கு மேல் மிகக்கூடாது.

(A) 1 year
1 வருடம்

(B) 2 years
2 வருடங்கள்

(C) 3 years
3 வருடங்கள்

(D) 5 years
5 வருடங்கள்

18. The form PWA XV-A and PWA XV- B is used to enter
PWA XV-A மற்றும் PWA XV-B படிவங்கள் எங்கு உள்ளீடு செய்ய உபயோகப்படுத்தப்படுகிறது?

(A) nominal muster roll
பணியாள் வருகைப்பட்டியல்

(B) daily labour
தினக்கூலி

(C) supplies
வழங்கு பொருள்

(D) rent data statement
வாடகை பட்டியல்

19. The employee who is under suspension is not eligible to get
தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்ட ஊழியர் கீழ்க்கண்ட எதை பெற தகுதியற்றவராவார்?

(A) HRA
வீட்டு வாடகைப்படி

(B) CCA
நகர ஈட்டுப்படி

(C) DA
அகவிலைப்படி

(D) MA
மருத்துவப்படி

20. The Chief engineer in the PWD (including Buildings, Irrigation and Highways and Rural works) are authorized to write off losses not exceeding __________ in each case by way of damage to immovable property belonging to Government.
அரசுக்கு சொந்தமான சேதமடைந்த ஒவ்வொரு அசையா சொத்துக்களையும் __________ தொகைக்கு மிகாமல் இருந்தால், பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளரால் (கட்டடம், பாசனம் மற்றும் நெடுஞ்சாலை மற்றும் ஊரக பணிகள்) தள்ளுபடி செய்ய இயலும்.

(A) Rs. 3,000
ரூ. 3,000

(B) Rs. 2,500
ரூ. 2,500

(C) Rs. 5,000
ரூ. 5,000

(D) Rs. 10,000
ரூ. 10,000

21. Compulsory retirement is being governed by which of the following rules
கட்டாய ஓய்வு என்பது கீழ்க்கண்ட எந்த விதியின் கீழ் நிர்வகிக்கப்படுகிறது?

(A) F.R. 56
அ.வி. 56

(B) F.R. 59
அ.வி. 59

(C) F.R. 110
அ.வி. 110

(D) F.R. 40
அ.வி. 40

22. Whenever Measurement books change hands, even if it is only from one office to another situated in the same building, the receipts of the books should be acknowledged in writing by a responsible person of a grade not inferior to that of a
ஒரு அலுவலகத்திலிருந்து ஒரே கட்டத்திற்குள் அமைந்த வேறு ஒரு அலுவலகத்திற்கு அளவீட்டு புத்தகங்கள் கைமாறும் பொழுதெல்லாம், அந்த புத்தகத்தை பெறுபவர், எந்த தரத்திற்கு குறைவாக இல்லாத ஒரு பொறுப்பான நபரால் எழுத்துப்பூர்வமாக ஒப்புகை அளிக்க வேண்டும்?

(A) Superintendent
கண்காணிப்பாளர்

(B) Assistant
உதவியாளர்

(C) Junior assistant
இளநிலை உதவியாளர்

(D) Record clerk
பதிவுரு எழுத்தர்

23. The initial supply of flags, flag staffs, blocks and ropes for buildings in charge of the PWD will be met from
பொதுப்பணித்துறையின் பொறுப்பிலுள்ள கட்டடங்களுக்கான கொடிகள், கொடி கம்பங்கள், கற்கள் மற்றும் கயிறுகள் ஆகியவற்றின் ஆரம்ப விநியோகம் எந்த தலைப்பின் கீழ் வரும்?

(A) 258 Public works
258 பொதுப்பணி

(B) 269 Public works
269 பொதுப்பணி

(C) 259 Public works
259 பொதுப்பணி

(D) 248 Public works
248 பொதுப்பணி

24. Every department authority should verify periodically, and atleast ________, all security which it has taken in various forms from government servants and contractors and report the result to the immediate superior authority.
அரசு ஊழியர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் ஆகியோரிடமிருந்து பெறப்பட்ட பலதரப்பட்ட படிவங்களின் அனைத்து பாதுகாப்புகளையும், ஒவ்வொரு துறை அதிகாரிகளும், குறைந்தபட்சம் ________ சரிபார்த்து உயர் அதிகாரிக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

(A) once a year in April
ஒவ்வொரு ஆண்டின் ஏப்ரல் மாதத்தில்

(B) once a year in May
ஒவ்வொரு ஆண்டின் மே மாதத்தில்

(C) once a year
ஒவ்வொரு ஆண்டும்

(D) twice a year
ஆண்டிற்கு இருமுறை

25. Study leave shall not ordinarily be granted to a Government servant
சாதாரணமாக கல்வி விடுப்பு கீழ்க்காணும் யாருக்கு வழங்கப்படமாட்டாது?

(A) who is due to retire or has opted to retire from service within three years of the date which he is expected to return to duty after the expiry of the leave
விடுப்பு முடித்து திரும்பும் நாளில் இருந்து மூன்று வருடத்திற்குள் ஓய்வு பெறுபவர் அல்லது ஓய்வு பெற விருப்பம் தெரிவித்துள்ளவர்கள்

(B) who holds a gazette post under the Government
அரசின் கெஜட் (Gazette) பதவியில் உள்ளவர்கள்

(C) who has rendered five years service under the Government
அரசு பணியில் 5 ஆண்டுகள் பணி புரிந்துள்ளவர்கள்

(D) who has rendered ten years service under the Government
அரசு பணியில் 10 ஆண்டுகள் பணி புரிந்துள்ளவர்கள்

26. The duplicate keys of division and sub division cash chest should be placed under the seal of the Executive Engineer in the custody of the ________ in the jurisdiction of the division.
கோட்டம் மற்றும் உபகோட்டத்தில் உள்ள பணப்பெட்டியின் மாற்று சாவிகள், அக்கோட்டம் மற்றும் உபகோட்டத்தின் செயற் பொறியாளரின் அதிகார வரம்பிற்கு உட்பட்ட ________ கட்டுப்பாட்டின் கீழ் வைக்கப்பட வேண்டும்.

(A) Sub treasury officer
சார் கருவூல அதிகாரி

(B) Accountant General
முதன்மை கணக்காயர்

(C) Treasury officer
கருவூல அதிகாரி

(D) Pay and accounts officer
சம்பள கணக்கு அலுவலர்

27. Light and petty tools such as 'carpenters', 'blacksmiths' or 'fitters' tools
தச்சர், கொல்லர் அல்லது பொருத்துநர் ஆகியோரின் இலகுவான மற்றும் சிறிய கருவிகளை ________.

(A) can be hired out
வெளியில் வாடகைக்கு விடலாம்

(B) can be hired with approval of competent authority
தகுதிவாய்ந்த அதிகாரியின் ஒப்பளிப்பின் அடிப்படையில் வெளியில் வாடகைக்கு விடலாம்

(C) should not be hired out at all
எந்த நிலையிலும் வெளியில் வாடகைக்கு விடக்கூடாது

(D) can be hired out for 3 years.
வெளியில் மூன்று ஆண்டுகளுக்கு வாடகைக்கு விடலாம்

28. The Heads of Department are permitted to lease buildings to the extent of their powers upto a period of
துறைத் தலைவர் தங்கள் அதிகாரத்திற்கு உட்பட்டு கட்டடங்களை ________ காலம் வரை குத்தகைக்கு விட அனுமதிக்கப்படுகிறார்.

(A) 3 years
3 வருடங்கள்

(B) 2 years
2 வருடங்கள்

(C) 5 years
5 வருடங்கள்

(D) 10 years
10 வருடங்கள்

29. During study leave a Government servant shall draw leave salary equal to the amount admissible during ________ under the TN leave Rules, 1933.
கல்வி விடுப்பில் உள்ள ஒரு அரசு ஊழியருக்கு, வழங்கப்படும் விடுப்பூதியமானது தமிழ்நாடு விடுப்பு விதிகள் 1933-ன்படி கீழ்க்காணும் எந்த ஊதியத்திற்கு இணையானது?

(A) full pay leave
முழு விடுப்பூதியம்

(B) half pay leave
அரை விடுப்பூதியம்

(C) no pay leave
ஊதியமில்லா விடுப்பு

(D) one third pay leave
1/3 விடுப்பூதியம்

30. __________ deals with forign service.
அயற்பணியானது _________ விதியுடன் தொடர்புடையது.

(A) F.R. 110,114
அ.வி. 110, 114

(B) F.R.22(B)
அ.வி. 22 (பி)

(C) F.R. 106
அ.வி. 106

(D) F.R. 78
அ.வி. 78

31. Which of the following periods does not count for granting annual increments
பின்வரும் எந்த காலமானது ஆண்டு ஊதிய உயர்வுக்கு கணக்கில் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது?

(A) training period
பயிற்சிக்காலம்

(B) study leave
கல்வி விடுப்பு

(C) unearned leave on private affairs
சொந்த காரணங்களுக்கான ஈட்டா விடுப்பு

(D) extra ordinary leave without MC
மருத்துவ சான்றில்லா ஊதியமில்லாத விடுப்பு

32. While preparing estimate __________ shall be provided for petty supervision and contingencies.
மதிப்பீடு தயாரிக்கும் பொழுது, மதிப்பீட்டிலுள்ள மிகச் சிறு ஆய்வுப்பணிகள் மற்றும் சில்லறை செலவினங்களுக்காக _________ ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

(A) 5%

(B) $2\frac{1}{2}$%

(C) 1%

(D) 3%

33. Original tender and agreement shall be under the custody of the __________ of the Division office.
கோட்ட அலுவலகத்தில், விலைப்புள்ளி மற்றும் ஒப்பந்தங்களின் அசலானவற்றை, யாருடைய _________ கட்டுப்பாட்டின் கீழ் வருகிறது

(A) Divisional Accountant
கோட்டக் கணக்கர்

(B) Draughting officer
வரைதொழில் அலுவலர்

(C) Superintendent
கண்காணிப்பாளர்

(D) Assistant Engineer
உதவிப் பொறியாளர்

34. No authority lower than the officer in charge of a _________ can accept any tender or make a contract for public works.

_________ பொறுப்பிலுள்ள அதிகாரியைவிட குறைவான எந்த அதிகாரியும், பொதுப்பணிகளுக்கான விலைப்புள்ளி அல்லது புதிய ஒப்பந்தத்தை ஏற்க முடியாது.

(A) Assistant Excutive Engineer
உதவி செயற் பொறியாளர்

(B) Superintending Engineer
கண்காணிப்பு பொறியாளர்

(C) Chief Engineer
தலைமைப் பொறியாளர்

(D) Executive Engineer
செயற் பொறியாளர்

35. The District Tender Bulletin shall be published by the District Tender Bulletin Officer at least.

மாவட்ட ஒப்பந்த அறிவிப்பு குறைந்தபட்சம் _________ காலத்திற்கு ஒருமுறை மாவட்ட ஒப்பந்த அதிகாரியால் வெளியிடப்படுகிறது.

(A) once in a week
வாரத்திற்கொருமுறை

(B) once in a month
மாதத்திற்கொருமுறை

(C) once in 10 days
பத்து நாட்களுக்கொருமுறை

(D) once in 15 days
15 நாட்களுக்குகொருமுறை

36. The number of qualified candidates to be considered for preparing approved candidate list to fill up 20 vacancies shall be

20 காலியிடங்களுக்கான ஏற்பளிக்கப்பட்ட பட்டியல் தயார் செய்வதற்கு, பரிசீலிக்கப்பட வேண்டிய தகுதிவாய்ந்த நபர்களின் எண்ணிக்கை

(A) 150% of the actual number of estimated vacancies, subject to a minimum of 140:

உத்தேச காலியிடங்களின் 150% நபர்கள், குறைந்தபட்சம் 140 க்கு உட்பட்டது

(B) 175% of the actual number of estimated vacancies, subject to a minimum of 40;

உத்தேச காலியிடங்களின் 175% நபர்கள், குறைந்தபட்சம் 40 க்கு உட்பட்டது

(C) 200% of the actual number of estimated vacancies

உத்தேச காலியிடங்களின் 200% நபர்கள்

(D) 125% of the actual number of estimated vacancies
உத்தேச காலியிடங்களின் 125% நபர்கள்

37. The head quarters of the Tamil Nadu Infrastructure Development Board shall be at
தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு கழகத்தின் தலைமையிடம் எங்கு அமைந்துள்ளது?

(A) Madurai
மதுரை

(B) Chennai
சென்னை

(C) Trichy
திருச்சி

(D) Coimbatore
கோவை

38. The maximum period upto which the probation of a Government servant shall be extended so as to enable him to acquire the test qualification, is fixed as
தகுதிகாண் பருவம் முடிவடையாத ஒரு அரசு ஊழியருக்கு, தகுதிகாண் பருவ தேர்வில் தேர்ச்சிப் பெறாத நிலையில் வழங்கப்படகூடிய அதிகப்பட்ச காலம் எவ்வளவு?

(A) 5 years
5 வருடங்கள்

(B) 2 years
2 வருடங்கள்

(C) 3 years
3 வருடங்கள்

(D) 1 year
1 வருடம்

39. The Act to regulate the Service conditions of the Tamil Nadu Government Servants was enacted in the year
தமிழ்நாடு அரசு ஊழியரை வரன்முறைப்படுத்தும் பணி விதிகள் எந்த ஆண்டு இயற்றப்பட்டது?

(A) 2016

(B) 2017

(C) 2018

(D) 2019

40. The permanent cadre of each service, class, category and grade shall be determined by the
ஒவ்வொரு நிரந்திர பதவிக்கும் பணி, வகுப்பு, வகை மற்றும் தரத்தை தீர்மானிப்பது

(A) H.O.D
துறைத்தலைவர்

(B) Government
அரசு

(C) Chief Engineer
தலைமைப் பொறியாளர்

(D) Superintending Engineer
கண்காணிப்பு பொறியாளர்

41. The Tamil Nadu Infrastructure Development Act was enacted in the year
தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டுச் சட்டம் எந்த ஆண்டு இயற்றப்பட்டது?

(A) 2012
(B) 2013
(C) 2014
(D) 2015

42. The Tamil Nadu Infrastructure Development Act, 2012 apply to all Projects of a value exceeding ________ implemented by a public agency.
ஒரு பொது நிறுவனத்தால் செயல்படுத்தப்படும், அனைத்து திட்டங்களின் மதிப்பீடானது தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டுச் சட்டம் 2012-ன்படி ________க்கு மேல் இருக்க வேண்டும்.

(A) rupees five hundred crore
ரூ. 500 கோடி

(B) rupees one hundred crore
ரூ. 100 கோடி

(C) rupees two hundred crore
ரூ. 200 கோடி

(D) rupees three hundred crore
ரூ. 300 கோடி

43. The Chair person of the Tamil Nadu Infrastructure Development Board shall be
தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தின் தலைவராக ________ இருப்பார்.

(A) Minister in Charge of Finance
நிதித்துறையின் அமைச்சர்

(B) Chief Minister
முதலமைச்சர்

(C) the Secretary to Government, Public Works Department
அரசு செயலாளர், பொதுப்பணித்துறை

(D) the Secretary to Government, Industries Department
அரசு செயலாளர், தொழில்துறை

44. When measurements are taken jointly by more than one Government servant ________ should record and sign the measurements.
ஒன்றுக்கும் மேற்பட்ட அரசு ஊழியர்கள் கூட்டாக அளவீடுகள் எடுக்கும்பொழுது அளவீட்டில் பதிவு செய்து ________ கையெழுத்திட வேண்டும்.

(A) The senior most of them
அவர்களில் மூத்தவர்

(B) The junior most of them
அவர்களில் இளையவர்

(C) Any one of them
அவர்களில் யாரோ ஒருவர்

(D) All of them
அவர்கள் எல்லோரும்

45. All appropriations lapse
அனைத்து ஒதுக்கீடுகளும் எப்போது காலாவதியாகின்றன?

(A) at the close of Financial year
நிதியாண்டின் முடிவில்

(B) at the end of the year
வருடத்தின் முடிவில்

(C) at September of every year
ஒவ்வொரு வருடமும் செப்டம்பர் மாதத்தில்

(D) at June of every year
ஒவ்வொரு வருடமும் ஜூன் மாதத்தில்

46. Executive Engineer of a Public Works Division, will check measure important works of atleast _________ in a year.
பொதுப்பணித்துறை கோட்ட செயற்பொறியாளர் ஒரு வருடத்தில், குறைந்தபட்சம் _________ முக்கிய பணிகளின் அளவீடுகளை சரிபார்ப்பார்.

(A) 12 works
12 பணிகள்

(B) 30 works
30 பணிகள்

(C) 24 works
24 பணிகள்

(D) 15 works
15 பணிகள்

47. The Tender Transparency rules came into force on
ஒப்பந்த வெளிப்படைத்தன்மை விதிகள் அமலுக்கு வந்த நாள்

(A) 1st September 2000
2000 செப்டம்பர் 1ம்தேதி

(B) 1st October 2001
2001 அக்டோபர் 1ம்தேதி

(C) 1st October 2000
2000 அக்டோபர் 1ம்தேதி

(D) 1st September 2001
2001 செப்டம்பர் 1ம்தேதி

48. Under the scheme of "Flexible complementing" a panel of persons who will be completing _________ years of satisfactory service during the period from 1st June of a year to 31st May of the next year are suitable for advancement to the next higher post.

சிறப்பு தற்காலிக நியமனமுறையின் கீழ் _________ வருடங்கள் ஒரே பதவியில் திருப்திகரமாக பணி முடிக்கும் ஒருவர், அந்த ஆண்டின் ஜூன் 1ம் தேதி முதல் அடுத்த ஆண்டின் 31 மே மாதம் வரை உள்ள தேர்ந்த பெயர்ப்பட்டியலில் தெரிவு செய்யப்படும் நபர், உயர்பதவிக்கு தகுதியானவர்

(A) 10
(B) 5
(C) 15
(D) 20

49. The Chair person of the Executive Committee of the Tamil Nadu Infrastructure Development Board shall be.

தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தின் செயற் குழுவின் தலைமை பொறுப்பு வகிப்பவர்

(A) the Chief Secretary to Government
அரசு தலைமைச் செயலாளர்

(B) the Chief Executive Officer of the Board
வாரியத்தின் தலைமை செயல் அதிகாரி

(C) the Secretary to Government, Public Works Department
அரசு செயலாளர், பொதுப்பணித்துறை

(D) the Secretary to Government, Industries Department
அரசு செயலாளர், தொழில்துறை

50. A candidate for appointment to a post under the State shall be _________.

மாநிலத்தின் கீழ் ஒரு பதவிக்கு நியமனம் செய்யவதற்கான நபர்

(A) a subject of Afghanistan
ஆப்கானிஸ்தான் சார்ந்த ஒருவர்

(B) a citizen of India
இந்திய குடிமகன்

(C) a subject of China
சீனா சார்ந்த ஒருவர்

(D) a subject of Bangladesh
வங்களா தேசம் சார்ந்த ஒருவர்

51. A minimum of __________ % of all vacancies which are to be filled through direct recruitment shall be set apart for women candidates irrespective of the fact whether the rule of reservation of appointment applies to the posts or not.
ஒதுக்கீடு முறை பொருந்தும் அல்லது பொருந்தாது என்ற காரணம் இல்லாமல், நேரடி நியமனமுறை மூலம் நிரப்பப்படும் அனைத்து காலியிடங்களின் குறைந்த பட்சம் __________ சதவிகிதம் பெண்களுக்கு ஒதுக்கப்படும்.

(A) 30
(B) 40
(C) 50
(D) 60

52. After a person has entered service, an application to alter the date of his birth as entered in the official records shall be entertained only if such an application is made within
ஒரு நபர் பணியில் சேர்ந்த பிறகு, அவர் அதிகாரப்பூர்வ பதிவேடுகளில் உள்ளிடப்பட்ட பிறந்த தேதியினை மாற்றுவதற்கு அளிக்கப்படும் விண்ணப்பம் __________ க்குள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(A) seven years of such entry into service
பணியில் சேர்ந்து 7 ஆண்டுகள்

(B) one year of such entry into service
பணியில் சேர்ந்து 1 ஆண்டு

(C) three years of such entry into service
பணியில் சேர்ந்து 3 ஆண்டுகள்

(D) five years of such entry into service
பணியில் சேர்ந்து 5 ஆண்டுகள்

53. __________ are competent to deal with loss of Measurement books.
தொலைந்து போன அளவுச் சுவடிகளை தள்ளுபடி செய்வதற்கு __________ தகுதியான அலுவலர்.

(A) Assistant Executive Engineer
உதவி செயற் பொறியாளர்

(B) Chief Engineer
தலைமைப் பொறியாளர்

(C) Superintending Engineer
கண்காணிப்பு பொறியாளர்

(D) Executive Engineer
செயற் பொறியாளர்

54. Who is responsible for auditing of all expenditure charged against the Government?
அரசு பணிகளில் (வேலைகளில்) செலவிடப்படும் செலவினங்களை தணிக்கை செய்யும் பொறுப்புள்ள நபர்

(A) Accountant General of the state
மாநில முதன்மை கணக்காயர்

(B) Chief Engineer
தலைமைப் பொறியாளர்

(C) Superintending Engineer
கண்காணிப்பு பொறியாளர்

(D) Executive Engineer
செயற் பொறியாளர்

55. In the case of leveling instruments required for ordinary purposes purchase should be made only from the firms approved by
ஒரு சாதாரண நோக்கத்திற்காக தேவைப்படும், சமன்படுத்தும் கருவியானது, அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து வாங்குவதற்கு, ஒப்புதல் வழங்க வேண்டியவர்

(A) Chief Engineer
தலைமைப் பொறியாளர்

(B) Superintending Engineer
கண்காணிப்பு பொறியாளர்

(C) Assistant Executive Engineer
உதவி செயற் பொறியாளர்

(D) Executive Engineer
செயற் பொறியாளர்

56. No tree or main branch of a tree inside the compound of Government Buildings shall be cut without the concurrence of
அரசு கட்டடங்களின் வளாகத்திலுள்ள மரத்தையும் அல்லது மரத்தின் முக்கிய கிளைகளையும் யாருடைய அனுமதியின்றி வெட்டக்கூடாது?

(A) Chief Engineer
தலைமைப் பொறியாளர்

(B) Superintending Engineer
கண்காணிப்பு பொறியாளர்

(C) Assistant Executive Engineer
உதவி செயற் பொறியாளர்

(D) Executive Engineer
செயற் பொறியாளர்

57. In cases where recovery to make good the monetary loss caused to the Government is ordered against a member of service, his name shall not be considered for inclusion in the approved list during the period of such recovery, subject to a maximum period of __________ from the date of issue of order.
அரசாங்கத்திற்கு ஏற்படும் பண இழப்பை சரிசெய்வதற்கு, பணி உறுப்பினருக்கு எதிராக மீட்டெடுப்புக்கு உத்திரவிடப்பட்டால், உத்தரவு வெளியிடப்பட்ட அத்தகைய மீட்டெடுப்பு காலத்தில், அதிகபட்சமாக __________ உட்பட்டு அங்கீகரிக்கப்பட்ட பட்டியலில் பெயர் சேர்க்கப்படாது.

(A) 24 months
24 மாதங்கள்

(B) 12 months
12 மாதங்கள்

(C) 6 months
6 மாதங்கள்

(D) 3 months
3 மாதங்கள்

58. __________ should have all their stock in their divisions checked at least once in a year.
__________ அவர்களின் கோட்டத்திலுள்ள அனைத்து இருப்புகளையும், வருடத்திற்கு ஒருமுறையாவது சரிபார்க்கப்பட வேண்டும்.

(A) Superintending Engineer
கண்காணிப்பு பொறியாளர்

(B) Executive Engineer
செயற் பொறியாளர்

(C) Assistant Executive Engineer
உதவி செயற் பொறியாளர்

(D) Chief Engineer
தலைமைப் பொறியாளர்

59. __________ have no powers to sanction excess over estimates sanctioned by higher authority.
உயர் அதிகாரியால் ஒப்பளிக்கப்பட்ட மதிப்பீட்டைவிட அதிகமாக ஒப்பளிக்க __________ க்கு அதிகாரம் இல்லை.

(A) Superintending Engineer
கண்காணிப்பு பொறியாளர்

(B) Assistant Executive Engineer
உதவி செயற் பொறியாளர்

(C) Executive Engineer
செயற் பொறியாளர்

(D) Chief Engineer
தலைமைப் பொறியாளர்

60. In cases of urgency _________ may authorize the commencement of periodical repairs in anticipation of the formal sanction to the estimate.
அவசர சூழ்நிலையில், முறையான அனுமதியை எதிர்பார்த்து அவ்வப்போது பழுதுபார்க்கும் பணியை தொடங்க, _________ க்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

(A) Assistant Executive Engineer
உதவி செயற் பொறியாளர்

(B) Chief Engineer
தலைமைப் பொறியாளர்

(C) Superintending Engineer
கண்காணிப்பு பொறியாளர்

(D) Executive Engineer
செயற் பொறியாளர்

61. Every _________ should keep a Register of Government Inspection Bungalows in his charge for each class.
ஒவ்வொரு _________ ம் தனது பொறுப்பில் இருக்கும் ஆய்வு மாளிகைகளின் ஒவ்வொரு வகுப்பிற்கும் பதிவேட்டை வைத்திருக்க வேண்டும்.

(A) Superintending Engineer
கண்காணிப்பு பொறியாளர்

(B) Executive Engineer
செயற் பொறியாளர்

(C) Assistant Executive Engineer
உதவி செயற் பொறியாளர்

(D) Chief Engineer
தலைமைப் பொறியாளர்

62. The method of execution of works in which the department itself engages the required labour and purchases or supplies the required materials is called
துறையே, வேலையை செயல்படுத்த, தேவையான உழைப்பை அளித்தும், தேவையான பொருட்களை வாங்கும் அல்லது விநியோகிக்கும் பணிகளை மேற்கொள்ளுதல் _________ என்று அழைக்கப்படுகிறது.

(A) The departmental method
துறை முறை

(B) The piece work contract method
துண்டு வேலை ஒப்பந்த முறை

(C) The lumpsum contract method
மொத்த ஒப்பந்த முறை

(D) The schedule contract method
அட்டவணை ஒப்பந்த முறை

63. _________ is the basis of all accounts of quantities of work done and may be produced as evidence in the court of law.
_________ அடிப்படையாக கொண்டு, செய்யப்பட்ட வேலையின் அளவுகளின் அனைத்து கணக்குகளும் நீதிமன்றத்தில் சாட்சியாக சமர்ப்பிக்கப்படலாம்.

(A) Measurement Book
அளவீட்டு புத்தகம்

(B) L.F. Book
எல்.எப். புத்தகம்

(C) Muster Roll
பணியாளர் வருகை பட்டி

(D) Tools and Plants Register
கருவிகள் மற்றும் தடவாளங்கள் பதிவேடு

64. Who can decide whether any intermediate completion report is required for a work?
ஒரு பணிக்கு இடைநிலை நிறைவு அறிக்கை தேவையா என்பதை யார் தீர்மானிக்கமுடியும்?

(A) Superintending Engineer
கண்காணிப்பு பொறியாளர்

(B) Chief Engineer
தலைமைப் பொறியாளர்

(C) Assistant Executive Engineer
உதவி செயற் பொறியாளர்

(D) Executive Engineer
செயற் பொறியாளர்

65. Revised Estimate for Works is necessary when a sanctioned estimate is likely to be exceeded by more than ________ percentage over the technically sanctioned estimate.
தொழில்நுட்ப ரீதியாக அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட, அனுமதிக்கப்பட்ட மதிப்பீடு ________ சதவிகிதம் அதிகமாக இருக்கும்பொழுது, பணிகளுக்கான திருத்தப்பட்ட மதிப்பீடு அவசியம்.

(A) 10
(B) 5
(C) 15
(D) 20

66. Pick out the wrong statement.
தவறான வாக்கியத்தை தேர்ந்தெடுக்கவும்

(A) No Municipal tax is payable for a Public Building situated in a cantonment
கண்டோன்மென்ட் பகுதியில் அமைந்துள்ள பொது நகராட்சி கட்டடத்திற்கு வரி செலுத்த வேண்டியதில்லை.

(B) Repairs to a building purchased from private person is an original work.
தனியாரிடமிருந்து வாங்கிய கட்டடத்தை பழுதுபார்ப்பது அசல் வேலை.

(C) Ordinarily, all tenderers should be told the reason for rejection of tenders.
பொதுவாக ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்பட்டதற்கான காரணத்தை ஒப்பந்ததாரரிடம் தெரிவிக்க வேண்டும்.

(D) No Government servant should exercise his powers of sanctioning expenditure so as to pass an order directly or indirectly to his own advantage.
எந்தவொரு அரசாங்க ஊழியரும் தனது சொந்த நன்மைக்காக, நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஒரு உத்தரவை நிறைவேற்றும் வகையில் செலவினங்களை அனுமதியளிக்கும் அதிகாரத்தை பயன்படுத்தக்கூடாது.

67. Procedure under which the tenderers are required to simultaneously submit two separate sealed covers one containing EMD and the second one containing price quotation is called.
ஒப்பந்ததாரர், ஒரே நேரத்தில் இரண்டு தனித்தனி முத்திரையிடப்பட்ட உரையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஒன்றில் முன்வைப்புத்தொகை (EMD), மற்றொன்று விலைப்புள்ளியையும் வைத்திருக்க வேண்டும். இதனை __________ என்று அழைப்பர்.

(A) Fixed rate contract system
நிலையான விகித ஒப்பந்த முறை

(B) Piece work contract system
துண்டு வேலை ஒப்பந்த முறை

(C) Two cover system
இரண்டு உறை முறை

(D) Supply and installation contract system.
வழங்கல் மற்றும் நிறுவல் ஒப்பந்த அமைப்பு

68. __________ shall make the tender bulletin available at any office of a Government department, local authority, statutory board, public sector undertaking, local body, university or cooperative institution.
ஒரு அரசாங்கத்துறை, உள்ளாட்சி அமைப்பு, சட்டப்பூர்வ வாரியம், பொதுத்துறை நிறுவனம், உள்ளாட்சி, பல்கலைக்கழகம் அல்லது கூட்டுறவு நிறுவனங்களில் ஏதேனும் ஒன்றில் __________ ஒப்பந்த அறிவிப்பு வெளியீட்டினை கிடைக்கும்படி செய்ய வேண்டும்.

(A) The Tender Bulletin Officer
ஒப்பந்த அறிவிப்பு அதிகாரி

(B) Secretary to Government
அரசு செயலர்

(C) District Collector
மாவட்ட ஆட்சியர்

(D) Tender inviting Authority
ஒப்பந்த அழைப்பு அதிகாரி

69. The notice inviting tenders and decisions on tenders shall be published in the State Tender Bullstin if the value of procurement exceeds.
கொள்முதலின் மதிப்பு __________ அதிகமாக இருக்கும் பட்சத்தில், ஒப்பந்தம் அழைக்கும் அறிவிப்பு மற்றும் ஒப்பந்தம் குறித்த முடிவுகள் மாநில ஒப்பந்த அறிவிப்பில் வெளியிடப்படும்.

(A) 5 crores
5 கோடிகள்

(B) 1 crore
1 கோடி

(C) 25 lakhs
25 லட்சங்கள்

(D) 5 lakhs
5 லட்சங்கள்

70. The Act to provide for transparency in the public procurement and to regulate the procedure in inviting and accepting tenders and matters connected there with or incidental thereto was enacted in the year.
பொது கொள்முதலில் வெளிப்படைத்தன்மையை வழங்கவும், ஒப்பந்த புள்ளிகளை அழைப்பது மற்றும் ஏற்றுக்கொள்வது மற்றும் அதனுடன் தொடர்புடைய அல்லது தற்செயலான விவரங்கள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவதற்கான நடைமுறையை ஒழுங்குபடுத்தும் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு

(A) 2013
(B) 2000
(C) 2012
(D) 1998

71. The Tender Inviting Authority shall not accept any tenders submitted by
ஒப்பந்தபுள்ளி அழைக்கும் அதிகாரி ________ மூலம் சமர்ப்பிக்கப்பட்ட எந்தவொரு ஒப்பந்த புள்ளியையும் ஏற்கமாட்டார்.

(A) facsimile (fax)
தொலைநகல் (FAX)
(B) post
தபால்
(C) electronic submission
மின்னணு சமர்ப்பிப்பு
(D) courier
கூரியர் சேவை

72. Minimum time for submission of tenders upto rupees ten crore in value is
பத்து கோடி ரூபாய் மதிப்புள்ள ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிப்பதற்கான குறைந்தபட்ச காலம்

(A) 20 days
20 நாட்கள்
(B) 10 days
10 நாட்கள்
(C) 30 days
30 நாட்கள்
(D) 15 days
15 நாட்கள்

73. The Earnest Money Deposit (EMD) shall remain valid for a period of not less than ________ beyond the period for validity the tender specified in the tender documents.
ஒப்பந்த ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தத்தின் செல்லுபடியாகும் காலத்திற்கு அப்பால் ________ குறையாத காலத்திற்கு முன் வைப்புத்தொகை (EMD) செல்லுபடியாகும்.

(A) 10 days
10 நாட்கள்
(B) 15 days
15 நாட்கள்
(C) 30 days
30 நாட்கள்
(D) 20 days
20 நாட்கள்

74. The sum total of all extensions sought by the Tender Accepting Authority for the completion of evaluation shall ordinarily not exceed
மதிப்பீட்டை முடிப்பதற்காக ஒப்பந்தத்தை ஏற்கும் அதிகாரியால் கோரப்பட்ட அனைத்து நீட்டிப்புகளின் கூட்டுத்தொகை சாதாரணமாக _________ க்கு அதிகமாக இருக்கக்கூடாது.

(A) 180 days
180 நாட்கள்

(B) 120 days
120 நாட்கள்

(C) 90 days
90 நாட்கள்

(D) 150 days
150 நாட்கள்

75. State support for a project in the form of subsidy, capital grant, and equity participation during the period of construction of the project shall not in the aggregate exceed _________ per cent of the total project cost;
திட்டத்தின் கட்டுமான காலத்தில், மானியம், மூலதன மானியம் மற்றும் பங்கு போன்றவை ஒரு திட்டத்திற்கான மாநில ஆதரவு மொத்த திட்ட மதிப்பீட்டில் _________ சதவிகிதத்திற்கு மேல் இருக்கக்கூடாது.

(A) 10
(B) 20
(C) 5
(D) 40

76. The tenure of the non-official expert members of the Executive Committee of the Tamil Nadu Infrastructure Development Board shall be _________ from their date of assumption of charges.
தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தின் செயற்குழுவின் அரசு சாரா நிபுணர் உறுப்பினரின் பதவிக்காலம், பதவியேற்ற நாளிலிருந்து _________.

(A) 5 years
5 ஆண்டுகள்

(B) 3 years
3 ஆண்டுகள்

(C) 7 years
7 ஆண்டுகள்

(D) 2 years
2 ஆண்டுகள்

77. The enhanced power delegated to the Superintending Engineer for accepting tender without tender excess.
ஒப்பந்த புள்ளி தொகைக்கு மிகாமல் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்வதற்கு கண்காணிப்பு பொறியாளருக்கு வழங்கப்பட்டுள்ள மேம்பட்ட அதிகாரம்

(A) 75 lakhs to 85 lakhs
75 இலட்சங்கள் முதல் 85 இலட்சங்கள் வரை

(B) 50 lakhs to 75 lakhs
50 இலட்சங்கள் முதல் 75 இலட்சங்கள் வரை

(C) 50 lakhs to 100 lakhs
50 இலட்சங்கள் முதல் 100 இலட்சங்கள் வரை

(D) 85 lakhs to 100 lakhs
85 இலட்சங்கள் முதல் 100 இலட்சங்கள் வரை

78. The Chief Engineer, is having powers of Technical Sanction of works
தலைமைப் பொறியாளர், சாலை மற்றும் கட்டடம், பணிக்களுக்கான தொழில்நுட்ப அனுமதி அளிக்கும் அதிகாரம்

(A) Above Rs. 2 crore full powers
ரூ. 2 கோடிக்கு மேல் முழு அதிகாரம்

(B) Upto Rs. 50 lakhs
ரூ. 50 இலட்சங்கள் வரை

(C) Upto Rs. 1 crore
ரூ. 1 கோடி வரை

(D) Upto Rs. 5 crores
ரூ. 5 கோடிகள் வரை

79. The __________ may accord sanction for the provision of furniture for cutlery and crockery and other items for Government Traveller's bungalow.
அரசு பயணியர் மாளிகைக்கு மரச்சாமான்கள், வெட்டும் கருவிகள் மற்றும் மட்பாண்டங்கள் மற்றும் இதர பொருட்களை வாங்குவதற்கு __________ ஒப்புதல் வழங்கலாம்.

(A) Assistant Executive engineer
உதவி செயற் பொறியாளர்

(B) Superintending Engineer
கண்காணிப்பு பொறியாளர்

(C) Chief Engineer
தலைமைப் பொறியாளர்

(D) Executive Engineer
செயற் பொறியாளர்

80. When according technical sanction for a work, the sanctioning authority should communicate to __________ intimating amount of expenditure approved.
பணிக்கான தொழில்நுட்ப ஒப்புதலை வழங்கும்போது, ஒப்புதல் அளிக்கும் அதிகாரி, ஒப்பளிக்க செலவினத்தை __________ க்கு தெரிவிக்க வேண்டும்

(A) Government
அரசு

(B) Funding Agency
நிதி வழங்கும் நிறுவனம்

(C) Accountant General
மாநில கணக்காயர்

(D) Head of Department
துறைத் தலைவர்

81. How many days is allowed as joining time to an employee who is transferred within the same station?
ஒரே தலைமையிடத்திற்குள், இடமாற்றம் செய்யப்படும் ஒரு ஊழியருக்கு அதிகபட்சமாக எத்தனை நாட்கள் பணியேற்பிடைக்காலம் வழங்கலாம்?

(A) 2 days
2 நாட்கள்

(B) 8 days
8 நாட்கள்

(C) 1 day
1 நாள்

(D) 6 days
6 நாட்கள்

82. The rank of District Tender Bulletin Officer is not below the rank of
மாவட்ட ஒப்பந்தப்புள்ள செய்திமலர் வெளியிடும் அதிகாரி, இந்நிலைக்கு கீழ் இல்லாத அதிகாரி

(A) Deputy Collector
துணை ஆட்சியர்

(B) District Collector
மாவட்ட ஆட்சியர்

(C) Joint Commissioner
இணை ஆணையர்

(D) Commissioner
ஆணையர்

83. A Government servant in last grade service on earned leave or on unearned leave on medical certificate
ஒரு அரசாங்க கடைநிலை ஊழியர், ஈட்டிய விடுப்பு அல்லது மருத்துவ சான்றின் பேரில் ஈட்டா விடுப்புகால ஊதியம்

(A) is not entitled to any leave salary
எந்தவித விடுப்பூதியத்திற்கும் உரிமை கோர இயலாது

(B) is entitled to leave salary equal to his pay
ஊதியத்திற்கு சமமான விடுப்பு கால ஊதியத்திற்கு உரிமை கோரலாம்

(C) is entitled to half leave salary
அரை விடுப்பு கால ஊதியத்திற்கு உரிமை கோரலாம்

(D) is entitled to one third leave salary
விடுப்பூதியத்தில் 1/3 பங்கு உரிமை கோரலாம்

84. Treasury Bill Book (Tamil Nadu Treasury Code Form 70) shall be maintained upto
கருவூல பட்டியல் புத்தகம் (TNTC form 70) எத்தனை வருடங்கள் வரை பராமரிக்கப்பட வேண்டும்?

(A) Ten Years
பத்து ஆண்டுகள்

(B) Five Years
ஐந்து ஆண்டுகள்

(C) Three Years
மூன்று ஆண்டுகள்

(D) One Year
ஒரு ஆண்டு

85. Who is authority to sanction the supply and disposal of tent?
கூடாரத்தினை வழங்கவும் மற்றும் அகற்றவும் அனுமதிக்கும் அதிகாரம் பெற்றவர்

(A) Chief Engineer
தலைமைப் பொறியாளர்

(B) Executive Engineer
செயற் பொறியாளர்

(C) Assistant Executive Engineer
உதவி செயற் பொறியாளர்

(D) Workshop superintendent
பணிமனை கண்காணிப்பாளர்

86. Which Tax shall be exempted of Government Servants entitled to rent free quarters?
வாடகையில்லா குடியிருப்பில் வசிக்கும் அரசு ஊழியருக்கு எந்த வரியிலிருந்து விலக்களிக்கப்படும்?

(A) Service Tax
சேவை வரி

(B) Income Tax
வருமான வரி

(C) Wealth Tax
சொத்து வரி

(D) Professional Tax
தொழில் வரி

87. If the building is occupied by more than one department and the Revenue Department is one of the occupants, then the taxes should be paid by the ____________ department.

ஒரு கட்டடத்தை ஒன்றுக்கு மேற்பட்ட துறைகளால் ஆக்கிரமிக்கப்படும் பொழுது, அதில் வருவாய்த்துறையும் ஒரு ஆக்கிரமிப்பளராக இருக்கும் பட்சத்தில், வரியினை செலுத்தக்கூடிய துறை எது?

(A) Revenue Department
வருவாய்த் துறை

(B) Public Works Department
பொதுப்பணித் துறை

(C) Govt. Dept. which occupies the major portion
அதிக பரப்பளவை ஆக்கிரமித்துள்ள அரசுத்துறை

(D) Commercial Tax Department
வணிகவரித் துறை

88. FR 22 (1) (a) (i) deals with

அடிப்படை விதி 22 (1) (a) (i) எதனுடன் தொடர்புடையது?

(A) Joining Time
பணியேற்பிடைக்காலம்

(B) Pay fixation
ஊதிய நிர்ணயம்

(C) Foreign service
அயற்பணி

(D) Leave
விடுப்பு

89. Additional charge allowance is
கூடுதல் பொறுப்பு படிகளானது

(A) 1/4th of pay of regular post or 1/2 of minimum pay of additional post whichever is less
வழக்கமான பதவியின் 1/4 சம்பளம் அல்லது கூடுதல் பதவியின் 1/2 சம்பளம், இதில் எது குறைவோ, அச்சம்பளம்

(B) 1/5th of pay of regular post or 1/2 of minimum pay of additional post whichever in less
வழக்கமான பதவியின் 1/5 சம்பளம் அல்லது கூடுதல் பதவியின் 1/2 சம்பளம், இதில் எது குறைவோ, அச்சம்பளம்

(C) 1/4th of pay of regular post or 1/2 of minimum pay of addl. post whichever is higher
வழக்கமான பதவியின் 1/4 சம்பளம் அல்லது கூடுதல் பதவியின் 1/2 சம்பளம், இதில் எது அதிகமோ, அச்சம்பளம்

(D) 1/5th of pay of regular post or 1/2 of minimum pay of addl. post whichever is higher
வழக்கமான பதவியின் 1/5 சம்பளம் அல்லது கூடுதல் பதவியின் 1/2 சம்பளம், இதில் எது அதிகமோ, அச்சம்பளம்

90. Headquarters of the suspended employee is
பணியிடை நீக்கம் செய்யப்பட்ட ஊழியரின் தலைமையகம்

(A) As desired by the employee
ஊழியர் விருப்பப்படும் இடம்

(B) As decided by the authority
அதிகாரி முடிவு செய்யும் இடம்

(C) Anywhere in India
இந்தியாவில் எங்கு வேண்டுமானாலும்

(D) Last place of duty
கடைசியாக பணிபுரிந்த இடம்

91. Duty to watch and control the rates paid for work lies with the
ஒரு வேலைக்கான கட்டணத்தை கண்காணிப்பதும், கட்டுப்படுத்துவதும் யாருடய கடமை?

(A) Superintending Engineer
கண்காணிப்புப் பொறியாளர்

(B) Divisional Accountant
கோட்ட கணக்கர்

(C) Assistant Executive Engineer
உதவி செயற் பொறியாளர்

(D) Executive Engineer
செயற் பொறியாளர்

92. Recoveries from Government Servant should not ordinarily be made in excess of
சாதாரணமாக ஒரு அரசு ஊழியரிடமிருந்து பிடித்தம் மேற்கொள்ள வேண்டிய தொகை ________ க்கு மிகக்கூடாது.

(A) 1/8 of pay
சம்பளத்தில் 1/8 பங்கு

(B) 1/4 of pay
சம்பளத்தில் 1/4 பங்கு

(C) 1/2 of pay
சம்பளத்தில் 1/2 பங்கு

(D) 1/3 of pay
சம்பளத்தில் 1/3 பங்கு

93. How many days before pay bills should be presented at Treasury?
எவ்வளவு நாட்களுக்கு முன்னதாக சம்பள பட்டியல், கருவூலத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்?

(A) 6 days
6 நாட்களுக்கு

(B) 10 days
10 நாட்களுக்கு

(C) 8 days
8 நாட்களுக்கு

(D) 5 days
5 நாட்களுக்கு

94. Losses of Stores not due to depreciation should be grouped and recovered under the following heads
பண்டக சாலையின் பொருட்கள் (தேய்மானம் தவிர) எந்த தலைப்பின் கீழ் சேர்த்து மீட்டெடுக்கப்பட வேண்டும்?

(A) Fair wear and Tear
சாதாரண பயன்பாட்டினால் ஏற்படும் தேய்மானம்

(B) Loses due to theft
திருடுபோன காரணங்களுக்கான இழப்பு

(C) Neglect after purchase
கொள்முதல் செய்த பின் பராமரிப்பின்மை

(D) Normal fluctionations of market prices
சந்தை விலையின் ஏற்றத்தாழ்வு

95. The progress of work should be recorded in which part of the muster roll?
பணியாளர் வருகைப் பட்டியில் (Muster Roll) எந்த பகுதியில் வேலையின் முன்னேற்றத்தினை குறித்து பதிவு செய்ய வேண்டும்?

(A) Part I
பகுதி I

(B) Part II
பகுதி II

(C) Part III
பகுதி III

(D) Part IV
பகுதி IV

96. In the estimates for a project ________ % shall be included for Tools and Plants (ordinary)
திட்டங்களுக்கு மதிப்பீடு தயாரிக்கும்போது ________ சதவிகிதம் கருவிகள் மற்றும் தளவாடங்கள் (சாதாரண) ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

(A) 2%
(B) 3%
(C) 5%
(D) 1%

97. When combining the " Leave on Private Affairs with Earned Leave", the Leave availing Limit is
ஈட்டிய விடுப்புடன், சொந்த காரணங்களுக்கான ஈட்டா விடுப்பையும் சேர்த்து துய்க்கும் போது, விடுப்பினை துய்க்கும் கால அளவு

(A) 6 months
6 மாதங்கள்

(B) 9 months
9 மாதங்கள்

(C) 2 months
2 மாதங்கள்

(D) 4 months
4 மாதங்கள்

98. Muster Roll is maintained for the ________ engaged at work site.
பணியிடத்தில் பணிபுரியும் ________ க்கு பணியாளர் வருகை பட்டி பராமரிக்கப்படுகிறது.

(A) Officers
அலுவலர்

(B) Office staff
அலுவலக ஊழியர்

(C) Technical staff
தொழில்நுட்ப உதவியாளர்

(D) Casual Labour
தினக்கூலியாட்கள்

99. Operation of the Department are divided primarily into categories.
துறையின் இயக்கம் எத்தனை வகைகளாக பிரிக்கப்படும்?

(A) Two
இரண்டு

(B) Three
மூன்று

(C) Four
நான்கு

(D) Five
ஐந்து

100. Pay and allowances for the month of March is due for payment on
மார்ச் மாதத்திற்கான சம்பளம் மற்றும் படிகள் பணப்பட்டுவாடா செய்யப்படும் நாள்

(A) In the month of April
ஏப்ரல் மாதத்தில்

(B) 29th of March
மார்ச் 29

(C) 25th of March
மார்ச் 25

(D) 31st of March
மார்ச் 31